1994 ஜனவரி 5]

பல குழாய்கள் உடைக்கப்பட்டதன் காரணமாகவும் சில விஷமிகளுடைய அத்துமீறிய செயல்கள் காரணமாகவும் இந்த நிகழ்வுகள் ஏற்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக காவல் துறைக்கும் நடவடிக்கை எடுக்கச் சொல்லி புகார் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இவ்வடைப்புகளை சரி செய்யும் பொருட்டு நீர் உந்தும் பணியானது நிறுத்தப்பட்டிருக்கிறது. உடைப்புகள் சரி செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வார்களா என்று ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு செய்தி துறை அமைச்சர் அவர்களும், நானும், கடந்த மாதம் அந்தப் பகுதிக்குச் சென்று வேண்டிய நடவடிக்கைகளை நேரிடையாகவே மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே அந்தப் பணிகளைப் பொறுத்தவரையில் கூடிய விரைவில் முடிக்கப்பட்டு குடிநீர் மக்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 177, திரு. கே. செல்வராஜ், இருக்கையில் இல்லை. திரு. சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

177–

அருள்மிகு கோணியம்மன் கோவிலின் வருமானம் பெருக வணிக மையம் கட்டுதல்

15164–*திரு கே. **செல்வராஜ்:

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) கோயம்புத்தூர், அருள்மிகு கோணியம்மன் கோவிலுக்குச் சொந்தமான கடைகளை தனியாரிடமிருந்து கையகப்படுத்தி வருமானம் பெருக வணிக மையம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு வெ. நடேசன் பால்ராஜ் , இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் *(ஆ)* : கோவைநகரில் உள்ள அருள்மிகு கோணியம்மன் திருக்கோயிலுக்குப் பாத்தியப்பட்ட 10 கடைகளை தனியாரிடமிருந்து அப்புறப்படுத்தி ஒரு இராஜகோபுரம் கட்டுவதற்காக ஒரு திட்டம் இருந்து வருவதால் வணிக மையம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரில் மிக பழம் பெரும் கோவிலான அருள்மிகு கோணியம்மன் கோவிலில், அதுவும் நகரின் மைய பகுதியிலே

குடி கொண்டிருக்கிற கோணி அம்மனுடைய திரு ஆலயம் மிகப் பிரசித்தி பெற்றது. அங்கு அதிகமான மக்கள் வந்து அம்மனின் அருள் பெற்று சென்று வருகிறார்கள். நம்முடைய அன்பு தெய்வம், குடும்ப தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே திருக்கோவில்கள் எல்லாம் சிறப்பு பெற்று தன்னிறைவு பெற்றுக் கொண்டிருக்கிற வேளையில் அங்கே பல ஆண்டுகளாக கடைகளை வைத்து நடத்தி வருபவர்கள் வழக்குகளைத் தொடர்ந்து அந்தக் கடைகளை காலி செய்யாமல் அங்கே திருகோவிலுக்கு வருமானம் தடைபட்டிருக்கிறது. ஆகவே அந்த வழக்கு தடை நீக்கப்படவேண்டும். அந்தப் பணி எப்போது துவங்கும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளன. மிக விரைவில் அந்த வழக்குகளை வழக்கறிஞர்கள் மூலமாக முடுக்கி விட்டு அதை முடித்து உடனடியாக அந்த ராஜகோபுரத்தை கட்டி, அந்தக் கோவிலுடைய அழகு பராமரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *வினா எண். 178,* திருமதி ரெ. சியாமளா, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

178 – –

கோவில்பட்டியில் சீர்மரபினர் மாணவர்கள் விடுதியில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

10318*–திருமதி ரெ. சியாமளா:**

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–

கோவில்பட்டியில் உள்ள சீர்மரபினர் மாணவர்களின் விடுதியில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், அங்கு புதிய பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதி துவங்கவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவில்பட்டியில் உள்ள சீர்மரபினர் மாணவர் விடுதியில் மாணவர் எண்ணிக்கையை ஐம்பதிலிருந்து எழுபத்தைந்தாக உயர்த்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அங்கு புதிய மாணவியர் விடுதி திறக்க செயற்குறிப்புகள் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியில் மாணவர்களின் விடுதியில் மாணவர்களின்